சுருக்கம்

தஞ்சாவூர் நகராட்சி பகுதியில் அமைந்துள்ள தஞ்சை பெரிய கோவில் 1000–ஆம் ஆண்டு விழா நடத்துவது தொடர்பாக தஞ்சாவூர் நகராட்சிக்கு அடிப்படை வசதிகளை மேம்படுத்த சிறப்பு மானியம் மற்றும் நிர்வாக அனுமதி வழங்கி ஆணைகள் – வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி.4) துறை

அரசாணை (நிலை) எண்:168 | நாள் :13.08.2010

படிக்கப்பட்டது:

நகராட்சி நிர்வாக இயக்குநரின், கடித எண். 36382/ இ3/ 2010, நாள் 9.8.2010.

ஆணை:

தஞ்சாவூர் நகராட்சி பகுதியில் அமைந்துள்ள "தஞ்சை பெரிய கோவில் 1000–ஆம் ஆண்டு விழா" நடத்துவது தொடர்பாக அரசு தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோவில் 1000–ஆம் ஆண்டு விழா கொண்டாடும்போது தஞ்சாவூர் நகராட்சிக்கு சில அடிப்படை வசதிகளை செய்து தருவதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 27.7.2010 அன்று அறிவிப்பு செய்திருந்தார். 30.7.2010 அன்று தலைமை செயலாளர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலும் மற்றும் 7.8.2010 அன்று மாண்புமிகு முதலமைச்சர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலும் இப்பொருள் குறித்து விவாதிக்கப்பட்டது.

2. மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் தஞ்சாவூர் நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது முக்கியமாகும் என்றும், இதன்பொருட்டு தஞ்சாவூர் நகராட்சிக்குட்பட்ட பழைய மற்றும் புதிய பேருந்து நிலையங்களை மேம்படுத்துதல், ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்கள் அமைத்தல், நகராட்சிக்குட்பட்ட சாலைகளை மேம்படுத்துதல், பூங்காக்களை அழகுபடுத்துதல் மற்றும் தெரு விளக்குகள் அமைத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது என்றும், தஞ்சாவூர் நகராட்சி ரூ. 66.00 கோடி மதிப்பீட்டில் பாதாள சாக்கடைத் திட்டத்தினை நிறைவேற்றியுள்ளதாகவும், இதனால் 270 கிலோ மீட்டர் சாலைகள் பழுதடைந்துள்ளன என்றும், இதில் சுமார் 45 கிலோ மீட்டர் சாலைகள் மிகவும் மோசமாக பழுதடைந்துள்ளதால் அவற்றை உடனடியாக சரி செய்ய வேண்டியது அவசியமாகிறது என்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

3. மேற்கூறிய பணிகள் தவிர, சாமந்தான் குளத்தை சரி செய்யும் செயற்குறிப்பு ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில், பொதுப்பணித் துறை மூலமும் மற்றும் ஜி.ஏ. கால்வாய் மேல் உள்ள பாலத்தை சரி செய்யும் செயற்குறிப்பு ரூ. 100.00 இலட்சம் மதிப்பீட்டில், நெடுஞ்சாலை துறை மூலமும் செயல்படுத்தப்பட உள்ளது என்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

4. இவ்விழா தொடர்பாக தஞ்சாவூர் நகராட்சியால் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ள பணிகள் மற்றும் மதிப்பீட்டுத் தொகை ஆகியன பின்வருமாறு:

| வரிசை எண் | பணிகளின் விவரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில் ) |
|---|---|---|

தஞ்சாவூர் நகராட்சியால் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள்:

| | | |
|---|---|---|
| 1 | நகராட்சியில் உள்ள சாலைகள் மேம்பாடு | ரூ.20.00 |
| 2 | பழைய மற்றும் புதிய பேருந்து நிலையங்கள் மேம்படுத்துதல் | ரூ.2.20 |
| 3 | பெரிய கோவில் முதல் மருத்துவ கல்லூரி வரை உள்ள சாலையில் தெரு விளக்குகள் அமைத்தல் | ரூ.0.70 |
| 4 | தஞ்சாவூர் நகராட்சிக்குட்பட்ட மூன்று இடங்களில் நவீன சுகாதார வளாகங்கள் அமைத்தல் | ரூ. 0.44 |
| 5 | சோழன் சிலை அமைந்துள்ள பூங்காவில் நிலத்தை சீர் செய்து அழகுபடுத்துதல் | ரூ.0.25 |
| 6 | தஞ்சாவூர் நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் 30 இடங்களில் பெயர் பலகைகள் மற்றும் தகவல் பலகைகள் அமைத்தல் | ரூ.0.10 |
| | மொத்தம் | ரூ.23.69 |

பொதுப்பணித் துறையினால் மேற்கொள்ளப்பட வேண்டிய பணி:

| | |
|---|---|
| சாமந்தான் குளத்தினை மேம்படுத்துதல் | ரூ. 0.50 |
| மொத்தம் | ரூ. 0.50 |

நெடுஞ்சாலை துறையினால் மேற்கொள்ளப்பட வேண்டிய பணி:

| | |
|---|---|
| பெரிய கோவில் அருகில் உள்ள ஜி.ஏ.கால்வாயின் பாலத்தை அகலப்படுத்துதல் | ரூ.1.00 |
| மொத்தம் | ரூ.1.00 |
| பெரு மொத்தம் | ரூ.25.19 |

5. தஞ்சாவூர் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் மற்றும் மேம்படுத்தப்பட்ட குடிநீர் திட்டத்தை நிறைவேற்றியதால் நகராட்சியின் நிதிநிலை திருப்திகரமாக இல்லை என்றும், எனவே மேற்படி தேவைப்படும் தொகை ரூ.25.19 கோடியை சிறப்பு மானியமாக தஞ்சாவூர் நகராட்சிக்கு வழங்குமாறும், பொதுப்பணித் துறை மற்றும் நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறைகள் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளுக்கு நூற்று

வீத கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்குமாறும், மேற்குறிப்பிட்ட பணிகளை நிறைவேற்ற நிர்வாக அனுமதி வழங்குமாறும் நகராட்சி நிர்வாக இயக்குநர் தனது கடிதத்தில் அரசிற்கு பரிந்துரை செய்துள்ளார்.

6. நகராட்சி நிர்வாக இயக்குநரின் பரிந்துரையினை அரசு கவனமாக ஆய்வு செய்தது. ஆய்வின் முடிவில் மேலே பத்தி 4–ல் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்ற ரூ.25.19 கோடி (இருபத்து ஐந்து கோடியே பத்தொன்பது இலட்சம் மட்டும்) தொகையினை சிறப்பு மானியமாக வழங்கியும், பொதுப்பணித் துறை மற்றும் நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை ஆகியவற்றின் மூலம் மேற்கொள்ளபடும் பணிகளுக்கு வழங்கப்படும் நூற்று வீத கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களித்தும் மற்றும் இப்பணிகளை நிறைவேற்ற நிர்வாக அனுமதி வழங்கியும் அரசு ஆணையிடுகிறது. மேலும், சாலை பணிகள் மேற்கொள்ளும்போது இயன்றவரை கான்கீரிட் சிமெண்ட் சாலைகள் அமைக்கும்படி அறிவுறுத்தப்படுகிறது. இச்சிறப்பு நிதியின் கீழ் சாலைகளுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகைக்குள் மேற்கொள்ளப்பட வேண்டிய சாலைப் பணிகளை தேர்வு செய்யவும் உரிய நிர்வாக அனுமதி வழங்கவும் நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. இத்தொகையினை பெற்று தஞ்சாவூர் நகராட்சி ஆணையருக்கு அளிக்கவும் நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

7. மேலே பத்தி 6–ல் குறிப்பிடப்பட்ட தொகையினை கோரிக்கை எண்.34–02–ன் கீழ் புதிதாக துவக்கப்படவுள்ள கீழ்க்கண்ட கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

> "2217 நகர்ப்பகுதி வளர்ச்சி – 05.ஏனைய நகர்ப்பகுதி வளர்ச்சித் திட்டங்கள் – 192 நகராட்சிகள், நகராட்சி மன்றங்கள் முதலியவற்றிற்கு நிதி உதவி – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டம் – II மாநில திட்டம் – JL.தஞ்சை பெரிய கோயில் 1000வது ஆண்டு விழா – அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல் – 09 உதவித்தொகை – 03 குறிப்பிட்ட திட்டங்கள் உதவித்தொகை" (த.தொ.கு.2217–05 192 JL – 0933)

8. மேற்கண்ட புதிய கணக்குத் தலைப்பிற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் மதிப்பீடு, கணக்கு நேரமைப்பு மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரியாவார்.

9. சம்பந்தப்பட்ட சம்பளக் கணக்கு அலுவலர் / கருவூல கணக்கு அலுவலர் மேற்கண்ட புதிய கணக்கு தலைப்பினை தங்கள் கணக்குகளில் துவக்கிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

10. மேலே பத்தி 6ல் அனுமதிக்கப்பட்ட செலவினம் "புதுப்பணி" குறித்த செலவினமாகும். சட்டப்பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். மேற்குறித்த ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதற்கண் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணம் பெறுவதன் மூலம் மேற்கொள்ளப்படும். முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி (வ.செ.பொது–1)த் துறையிலிருந்து தனியே வெளியிடப்படும். உரிய முன்பணம் வேண்டி உரிய படிவத்தில் நிதி (வ.செ.பொது–1)த் துறைக்கு அனுப்பி வைக்கும்படி நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் கோரப்படுகிறார். மேலும், இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2010–2011–ம் ஆண்டிற்கான துணை மானிய கோரிக்கையில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதி (வ.செ.பொது–1)த் துறைக்கு அனுப்பி வைக்குமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

11. இவ்வாணை, நிதித்துறையின் 13.08.2010 நாளிட்ட அலுவல் சார்பற்ற எண்.150/DS(B)/2010–ல் பெறப்பட்ட ஒப்புதலுடனும், கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.712 (எழுநூற்று பன்னிரண்டு) உடனும் வெளியிடப்படுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

க. அஷோக் வர்தன் ஷெட்டி,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக இயக்குநர், சேப்பாக்கம், சென்னை–600 005.
முதன்மைச் செயலாளர் , பொதுப்பணித் துறை, சென்னை–600 009.
செயலாளர், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை, சென்னை–600 009.
செயலாளர், சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை, சென்னை–600 009.
மாவட்ட ஆட்சியர், தஞ்சாவூர் மாவட்டம்.
உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை இயக்குநர், சென்னை–600 108.
தலைமைச் பொறியாளர், பொதுப்பணித் துறை (கட்டிடம்), சென்னை–600 005.
தலைமைச் பொறியாளர், நெடுஞ்சாலைத் துறை , சென்னை–600 005.
ஆணையர், இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, சென்னை–600 034.
மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர், தஞ்சாவூர்.
ஆணையாளர், தஞ்சாவூர் நகராட்சி, தஞ்சாவூர்.

<u>நகல்:</u>
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலர், சென்னை–600 009.
மாண்புமிகு துணை முதலமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை– 600 009.
மாண்புமிகு நிதி அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–600 009.
நிதித் துறை (ந.நி. (ம) கு.வ.) / (வ.செ.பொது I) / (வ.செ.பொது II), சென்னை–600 009.
சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை, சென்னை–600 002.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளரின்
தனிச் செயலர், சென்னை–600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந.2) துறை, சென்னை–600 009.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர். 13-08-2010